இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 29 மார்ச் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

# இலங்கை: கொழும்புப் பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (தொகுதி 3)

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | இலங்கை: கொழும்புப் பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (தொகுதி 3) |
| திட்ட இலக்கம் | 45148-008 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | ஒப்புதலளிக்கப்பட்டிருக்கின்றது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன் |
| நிதியிடல் மூலம்/ தொகை | **கடன் 3348-SRI: கொழும்புப் பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 3**<br>சாதாரண மூலதன வளங்கள் — US$123.00 மில்லியன்<br>**கடன் 3349-SRI: கொழும்புப் பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - தொகுதி 3**<br>ஆசிய அபிவிருத்தி நிதியம் — US$5.00 மில்லியன்<br>கடன்: கொழும்புப் பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (திட்டம் 3)<br>ஐரோப்பிய முதலீட்டு வங்கி — US$50.00 மில்லியன் |
| மூலோபாய செயற்பட்டியல் | சூழலியல்சார்ந்த நிலையான வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>அறிவுசார் தீர்வுகள்<br>கூட்டாண்மைகள்<br>தனியர்த்துறை அபிவிருத்தி |
| துறை / உபதுறை | **நீர் மற்றும் பிற நகர உட்கட்டுமானம் மற்றும் சேவைகள்** - நகர்ப்புற சுகாதார வசதிகள் - நகர்ப்புற கழிவுநீர் - நகர்ப்புற நீர் வழங்கல் |

| | |
|---|---|
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | வினைத்திறனான பாலின பெருவோட்ட இணைவு |
| விவரணம் | கொழும்பு தலைநகரத்தின் உள்ளும் சூழவும் நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவச் சேவைகளை மேம்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அரசாங்கமும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுகின்றன. கொழும்புப் பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (தொகுதி 3) கொழும்பில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதிசார் நிலைத்திருக்குந் தன்மையை மேம்படுத்துகின்றது. இது நகரத்தின் நீர் வழங்கல் வலையமைப்பினைப் புனருத்தாரணஞ் செய்தல் மற்றும் கசியும் அல்லது கொடுப்பனவின்றி விநியோகிக்கப்படும் நீரின் அளவினை குறைப்பதையும் உள்ளடக்குகின்றது. இத் திட்டம் நகரத்தின் கழிவுநீர்த் தொகுதியை புனரமைப்புச் செய்து விரிவாக்குவதுடன் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினையும் கட்டுமானம் செய்கின்றது. இது கொழும்புப் பெரும்பாகத்தில் பெண்கள் மற்றும் வறியவர்களை உள்ளடக்கிய, ஆயிரக்கணக்கான வதிவாளர்களுக்கு 24- மணித்தியால நீர் வழங்கல் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அதிகமான நேரத்தை வழங்குவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்றது. |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபயத்திற்கான தொடர்பும் | இலங்கையின் தலைநகரமும் பொருளாதார மற்றும் நிர்வாக மையமுமாகிய, கொழும்பின் சுமார் 95% பகுதி குழாய் நீர் வசதியைக் கொணடிருக்கிறது. தாழ்ந்த தொகுதி மற்றும் ஏற்றத்தாழ்வான நீர் அழுத்தம் மற்றும் இடையிடையேயான நீர் வரத்து இல்லாமை காரணமாக நகரத்தின் சில பிரதேசங்கள் நீரை உச்ச நேரம் தவிர்ந்த நேரங்களில் பெறுவதுடன் பிறர் நாளொன்றுக்கு சாராசரியாக 6 முதல் 10 மணித்தியாலங்களுக்கு மட்டுமே நீரைப் பெறுகின்றனர். விநியோக வலையமைப்பின் பல பகுதிகள் 100 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டவை. தொகுதியில் சுமார் அரை பங்கு நீர் தொகுதியின் பராமரிப்பிற்கு வருமானம் ஈட்டாது இழக்கப்படுகின்றது (NWR). கொழும்பு மக்கள் தொகையில் சுமார் 60% மோசமான நிலையிலுள்ள மற்றும் அடிக்கடி தமைப்படும் கழிவுநீர் தொகுதியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. சுமார் மூன்றில் ஒரு உந்து வசதிகள் செயற்படாமல் இருப்பதுடன் அது வழிந்தோடுதலை ஏற்படுத்துகின்றது. தற்போது, கழிவுநீர் சுத்திகரிப்புச் செய்யப்படாது கடலினுள் விடப்படுகின்றது. |
| தாக்கம் | ஒரு புதிய இலங்கைக்கான 2010-2020 தொலைநோக்குடன் கொழும்புப் பெரும்பாகத்தில் மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகள் மற்றும் முகாமைத்துவம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. |

**திட்ட விளைவு**

| | |
|---|---|
| விளைவின் விவரணம் | கொழும்பில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் மேம்படுத்தப்பட்ட தொகுதி வினைத்திறன் மற்றும் நிதி பேண்தகைமை. |
| விளைவை நோக்கிய முன்னேற்றம் | |

**அமுலாக்கலின் முன்னேற்றம்**

| | |
|---|---|
| திட்ட வருவிளைவுகள் | நீர் வழங்கல் தொகுதி புனரமைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது, மற்றும் |

| | |
|---|---|
| பற்றிய விவரணம் | கொழும்பு நகரின் வடகிழக்குப் பகுதியில் NRW குறைக்கப்பட்டுள்ளது (திட்டம் 1 இன் நிதியிடைவெளி நிரப்புகை உட்பட)<br>நீர் விநியோகத் தொகுதி புனரமைக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு நகரின் தென்மேற்குப் பகுதியில் NRW குறைக்கப்பட்டுள்ளது (திட்டம் 2 ற்கான நிதி இடைவெளியினை நிதியிடுவது உட்பட).<br>கொழும்பு தெற்கு நீரேந்து பிரதேசத்தில் கழிவுநீர்த் தொகுதி புனரமைக்கப்பட்டு மற்றும் விரிவாக்கப்பட்டுள்ளது.<br>கொழும்பு தெற்கின் நீரேந்து பிரதேசத்தில் இரண்டாம்நிலை கழிவுநீர் சுத்திகரிப்புப் நிலையம் கட்டப்பட்டது<br>சேவை வழங்குனர்களின் நிறுவனக் கட்டமைப்பு மற்றும் திறன் பலப்படுத்தப்பட்டது |
| அமுலாக்க முன்னேற்றத்தின் நிலை (வருவிளைவுகள், நடவடிக்கைகள், மற்றும் பிரச்சினைகள்) | |
| பூகோளம்சார் அமைவிடம் | |

**பாதுகாப்பு வகைகள்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | B |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | B |
| சுதேச மக்கள் | C |

**சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல்சார்ந்த பார்வைகள் | தொகுதி 3 சுற்றுசூழலியலிற்கான வகை B என வகைப்படுத்தப்பட்டுள்ளது. வெளியீடுகள் 1 மற்றும் 2 இற்காக, குடிசார் வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மீளாய்வு மற்றும் வெளிப்படுத்தலுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட, திட்ட ஆயத்தக் கட்டத்தில் தயாரிக்கப்பட்ட, வரைவு பூர்வாங்க சுற்றாடல் சோதனைகள் (IEEs), விரிவான வடிவமைப்பினை உள்ளடக்கி, புதுப்பிக்கப்படும். மேலதிக நிதி காரணமான உள்ளாற்றலுள்ள சுற்றாடல் தாக்கங்கள் தளம்- சார்ந்ததாக, குறுகிய காலமானதாக, முக்கியத்துவம் அற்ற தவிர்க்கப்படக் கூடியதும்/ அல்லது சுற்றுச்சூழல் முகாமைத்துவத் திட்டத்தில் (EMPs) இனங்காணப்பட்ட நடவடிக்கைகள் ஊடாக தணிக்கப்படக் கூடியதாகவும் இருக்கும். வெளியீடுகள் 3 மற்றும் 4 இற்காக, SPS இற்கு இணங்க ஒரு வரைவு பூர்வாங்க சுற்றாடல் சோதனைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றது, மற்றும் முதலீட்டுத் திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் மதிப்பீடு மற்றும் மீளாய்வுக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டது. கட்டுமான நடவடிக்கைகளின் போதான எதிர்மறைத் தாக்கங்கள் குறுகிய காலமானதாகவும், உள்ளூர்மயப்படுத்தப்பட்டதும், ஒப்பீட்டளவில் சிறிய பகுதியிலும், EMP இல் உள்ள தணித்தல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதன் ஊடாக குறைக்கப்படக் கூடியதாகவும் இருக்கும். செயற்பாட்டுத் தாக்கங்கள் முக்கியமானதாக இருக்க முடியாது என்பதுடன், EMP இல் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளின் ஊடாகத் தணிக்கப்பட்டக் கூடியதாகவும் இருப்பதுடன் திட்ட |

| | |
|---|---|
| | அமுலாக்கத்தின் போது செயற்படுத்தல்கள் மற்றும் பராமரிப்பு கையேடு தயாரிக்கப்படும். பல சாத்தியமான தாக்கங்களம் மற்றும் அவற்றின் முக்கியத்துவம், வடிவமைப்பில் உள்ள சுற்றாடல் விடயங்களை உள்ளடக்குவதன் ஊடாக ஏற்கனவே தணிக்கப்பட்டிருக்கின்றது. பூர்வாங்க சுற்றாடல் சோதனைகள் (IEEs) திட்ட முகாமைத்துவ அலகினால் பங்குதாரர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களினால் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு மொழியிலும் வடிவத்திலும் வெளிப்படுத்தப்படும். அனைத்து IEEகளும் விலைமனுவினதும் ஒப்பந்த ஆவணங்களினதும் பகுதியாக இருப்பதுடன் அமுலாக்கத்தின் போது கண்காணிக்கப்படும். விரிவான வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தின் போதான எந்தச் சுற்றுச்சூழல் பாதிப்புக்களையும் முகாமை செய்வதற்குப் போதுமான திறனை திட்ட முகாமைத்துவ அலகு கொண்டிருப்பது நிபுணர்களின் உதவியிலிருந்து உறுதி செய்யப்படும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அரையாண்டு அடிப்படையில் அறிவிக்கப்படும். |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | தொகுதி 3 தன்னிச்சையற்ற மீள்குடியேற்றத்திற்கு வகை B என வகைப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு தெற்கிற்கான நீரேந்து பிரதேசத்திற்கு ஒரு மீள்குடியேற்றத் திட்டம் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், SPS இற்கு இணங்க வெளிப்படுத்தப்பட்டது. மீள்குடியேற்றத் திட்டம் நிரந்தரப் பாதிப்புக்கள் மற்றும் சேவை வழங்கப்படாத பிரதேசங்களில் புதிய நீர் வெளியேற்று நிலையங்கள் மற்றும் கழிவுநீர் வலையமைப்பு கட்டுமானம் காரணமான தற்காலிக பாதிப்புக்கள் இரண்டினையும் கவனத்தில் எடுக்கின்றது. அரச நிலங்களில் வசிக்கும் மொத்தமாக 11 பாதிக்கப்பட்ட குடும்பங்கள் (38 பாதிக்கப்பட்ட நபர்கள்) தங்கள் வீடுகள் மற்றும் வாடகை வீடுகளுக்கான அணுகலை இழப்பர். சேவை வழங்கப்படாத பிரதேசங்களில் நேரியல் குழாய் கட்டுமானத்தின் போது, கொழும்பு தெற்கில் அண்ணளவாக 155 நடமாடும் விற்பனையாளர்கள் மற்றும் நடைபாதை வியாபாரிகளுக்கு ஏழு நாட்களுக்கும் குறைவாக தற்காலிக இடையூறு ஏற்படுதல் உட்பட, தற்காலிக வருமான இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. முழுமையான சாலை மூடல் மூன்று மீட்டர் அகலத்திற்கும் குறைந்த சாலைகளுடனான குடியிருப்புப் பகுதியில் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறான பகுதிகளில் அணுகல் இடையூறு தவிர்க்க கட்டுமான வேலைகள் இரவு நேரத்தில் மேற்கொள்ளப்படும். இறுதி வடிவமைப்பினைத் தொடர்ந்து மீள்குடியேற்றத் திட்டம் புதுப்பிக்கப்படும். கொழும்பு மாநகர சபை ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னைய திட்டங்களைச் செயற்படுத்தி இருப்பதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பாதுகாப்புக் கொள்கைகளில் பரீட்சயம் உடையதாக உள்ளது. திட்டம் 3 இன் நடவடிக்கைகளின் கீழ் எழும் மீள்குடியேற்றம் மற்றும் சமூகப் பிரச்சினைகளின் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பிற்கு நிபுணத்துவ ஆலோசகர்கள் உதவுவர். எதிர்பாராத பாதிப்புகள் மற்றும் சமூகப் பாதுகாப்புக்களிற்கு வழிகாட்ட முதலீட்டுத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட மீள்குடியேற்றக் கட்டமைப்பு பயன்படுத்தப்படும். திட்டம் 1 இன் மீள்குடியேற்ற கட்டமைப்பு அறிக்கை, திட்டம் 1 இன் மேலதிக நிதி முதலீட்டை உள்ளடக்கத்தக்கதாகப் புதுப்பிக்கப்பட்டது. |
| சுதேச மக்கள் | தொகுதி 3 பழங்குடி மக்களின் பிரிவு C என வகைப்படுத்தப்பட்டுள்ளது. உத்தேசத் திட்டப் பிரதேசத்தின் நகர்ப்புற அமைப்பைக் கருத்திற் கொண்டு பழங்குடி மக்கள் மீதான எந்தத் தாக்கங்களும் இனங்காணப்படவில்லை. ஆகையால் பழங்குடி மக்கள் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை** | |
| திட்ட வடிவமைப்பின் போது | தொடக்க சுற்றுச்சூழல் சோதனைகள் மற்றும் மீள்குடியேற்ற திட்ட ஆவணங்களின் தயாரிப்பின் போது கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| திட்ட அமுலாக்கத்தின் | அரச சார்பற்ற நிறுவனங்கள் சேர்த்துக்கொள்ளப்படும். அமுலாக்கத்தின் போது |

| | |
|---|---|
| போது | அதிக பங்குதாரர் தொடர்பாடல், பங்கேற்பு, மற்றும் கலந்தாலோசனைகள் நடாத்தப்படும். |

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | சகல ஆலோசகர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர்களின் பயன்பாடு தொடர்பான வழிகாட்டிகளுக்கு (2013, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) இணங்க ஆட்சேர்க்கப்படுவர். திட்டம் 3 இன் கீழான மொத்த ஆலோசனை உள்ளீடுகள் 1131 நபர் மாதங்களாக (5 சர்வதேச, மற்றும் 1126 தேசிய) இருக்குமென மதிப்பிடப்படுகின்றது. |
| கொள்வனவு | திட்டத்தின் கீழான அனைத்துக் கொள்வனவுகளும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்வனவு வழிகாட்டிகளிற்கு (2015, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) இணங்க மேற்கொள்ளப்படும். ஆலோசகர்களின் உதவியுடன் நிறைவேற்று முகவர்கள் மற்றும் அமுலாக்க முகவர்கள் திட்டம் 3 இற்கான விலைமனு ஆவணங்களைத் தயாரிப்பர். |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | மிங்யுவான் பான் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம் | தெற்காசியத் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் நீர் பிரிவு, தெற்காசியத் திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **MPCLG – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**<br>330, யூனியன் இடம், கொழும்பு 2,<br>இலங்கை<br>**நகர அபிவிருத்தி, நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு**<br>INFO@WATERMIN.GOV.LK<br>“லக்தியா மெதுர", இல. 35, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | - |
| உண்மை அறிதல் | - |
| MRM | 12 ஆகஸ்ட் 2015 |
| ஒப்புதல் | 08 திசெம்பர் 2015 |
| கடந்த மீளாய்வுப் பணி | - |
| கடந்த PDS புதுப்பிப்பு | 21 மார்ச் 2016 |

கடன் 3348-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **நிறைவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியானது** |
| 08 திசெம்பர் 2015 | - | - | 31 திசெம்பர் 2020 | - | - |

| **நிதியிடற் திட்டம்** | | **கடன் பயன்பாடு** | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (தொகை, US$, மில்லியனில்) | திகதி | ADB | ஏனையோர் | நிகர சதவிகிதம் |
| திட்டத்தின் செலவு | 173.02 | திரட்டிய ஒப்பந்த வழங்கல்கள் | | | |
| ADB | 123.00 | 08 திசெம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |
| சரிநிரப்புக்கூறு | 50.02 | திரட்டிய கடன் கொடுப்பனவுகள் | | | |
| இணை நிதியிடல் | 0.00 | 08 திசெம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |

கடன் 3349-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **நிறைவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியானது** |
| 08 Dec 2015 | - | - | 31 திசெம்பர் 2020 | - | - |

| **நிதியிடற் திட்டம்** | | **கடன் பயன்பாடு** | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (தொகை, US$, மில்லியனில்) | திகதி | ADB | ஏனையோர் | நிகர சதவிகிதம் |
| திட்டத்தின் செலவு | 5.00 | திரட்டிய ஒப்பந்த வழங்கல்கள் | | | |
| ADB | 5.00 | 08 திசெம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |
| சரிநிரப்புக்கூறு | 0.00 | திரட்டிய கடன் கொடுப்பனவுகள் | | | |
| இணை நிதியிடல் | 0.00 | 08 திசெம்பர் 2015 | 0.00 | 0.00 | 0% |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அது தோன்றும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதிதுவங்களையோ மேற்கொள்ளவில்லை.